1991 சனவரி 25]

மாக உற்பத்தி செய்கிற கிழங்கு உற்பத்தியாளர்களுக்குப் பாது காப்புத் தரவும், அந்த உற்பத்தி சிறப்பாக நடக்கவும், மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி யின் மூலம் அந்தச் சங்கத்திற்குக் கணிசமான நிதி ஒதுக்கவும், அதே நேரத்தில் உற்பத்தியாகிற கிழங்கைப் பாதுகாத்து சேமிக்க கோடவுன் கட்டித் தர வங்கியில் கடனாக நிதி ஒதுக்கினால் வாய்ப்பாக இருக்கும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கத்தின் மூலமாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அரசுக்குப் பரிந்துரைக்காக அனுப்பினால், அரசு அதைப் பரிசீலிக்கும்.

கைராட்டை நூற்புக் கூடம்.

*11292—திரு. மு. முத்தையா :

மாண்புமிகு சமூகநலம்மற்றும் ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரனார் மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், ஒட்டப்பிடாரம், ஓசநூத்து ஆகிய இரண்டு ஊர்களில் கைராட்டை நூற்புக்கூடம் இயங்காமல் இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றி அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது ஒட்டப்பிடாரம் மற்றும் ஓசநூத்து ஆகிய ஊர்களில் மூன்று கிராமிய நூற்பு நிலையங்கள் இயங்கி வரு கின்றன.

(ஆ) வினா எழவில்லை.

கழிவு நீரேற்றுத் திட்டம்.

*2231— திரு. சோ. பால்ராஜ் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;—

(அ) மதுரை மாநகரில் விடுபட்ட பகுதிகளை ஒருங் கிணைத்து கழிவு நீரேற்றுத் திட்டம் அமுல்படுத்த நடவடிக்கை உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்பெறும்?

[1991 சனவரி 25

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மதுரை மாநகரில் விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்க ஆய்வுப் பணிகள் முடிவடைந்து விட்டன. திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகின்றது. அது இறுதியாக்கப்பட்டபின் ஒப்புதல் வழங்கப்படும்.

திரு. சோ. பால்ராஜ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் தீட்டப்பட்டு அதன் அடிப்படையில் 65 வார்டுகளில் 12 வார்டுகளில் பகுதியாகவும், 16 வார்டுகளில் துவக்கப் படாமலும் இருக்கின்றன. அது எப்போது துவக்கப்படும் என்பதையும், அதன் விபரத்தையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்ட மதிப்பீடுகள் மூன்று நிலைகளில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ரூ. 8.2 கோடி செலவிலும், ரூ. 10.78 கோடி செலவிலும், ரூ. 13.01 கோடி செலவிலும் மூன்று திட்டங்கள் அரசுக்கு வந்திருக்கின்றன. இதில் மாநகராட்சியினுடைய துறை எவ்வளவு கொடுக்கமுடியும் என்று தெரிந்து, திட்டம் குறித்து விரைவில் முடிவெடுக்கப்படும்.

திரு. சோ. பால்ராஜ் : 12 வார்டுகளில் பகுதியாகவும், மீதியுள்ள 16 வார்டுகளில் வேலைக்கான திட்டத்தையும் எப்போது தீட்டி நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : ஆய்வுப்பணிகள் முடிந்துவிட்டன என்று குறிப்பிட்டேன். திட்ட மதிப்பீடு குறித்து இப்போது முடிவு செய்யப்படுகின்ற சூழ்நிலையில் இருக்கிறது. திட்ட மதிப்பீடு இறுதி செய்யப்பட்டவுடன் 4, 5 மாதங்களில் பணிகள் துவங்கப்படும்.

திரு. ந. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தின்கீழ் புறநகர்ப் பகுதிகளையும் சேர்க்கின்ற குறிப்பாணைகள் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாநகராட்சியின் மூலமாக இந்தக் கருத்துருவை அனுப்பினால் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.